## வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2463/ஆ2/2024 நாள்:21.02.2025

பொருள்: பள்ளிக் கல்வி-வேலூர் மாவட்டம்- அனைத்து வகை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு இணையவழி விளையாட்டுக்களின் தீய விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கட்டுரை போட்டி நடத்தப்பட்டது-மாவட்ட அளவில் முதல் இடத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு அளிப்பு விழா-கலந்து கொள்ள தெரிவித்தல்-சார்பு.

பார்வை:

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.066617/எப்/இ3/2024 நாள்: 27.11.2024
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித ந.க.எண்.2463/ஆ2/2024 நாள்:09.12.2024
3. தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணைய தலைவரின் கடித எண்.246/G2/TNOGA/2024-11, நாள்: 18.02.2025
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.066617/எப்/இ3/2024 நாள்: 24.02.2025

----------

பார்வை(1)-இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டம் அனைத்து வகை உயர்/மேல்நிலை பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இணைய வழி விளையாட்டுக்களுக்கு அடிமையாதல் மற்றும் அதனால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் கட்டுரை போட்டிகள் நடத்தப்பட்டு மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்கள் பார்வை(2)-இல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்பட்டது. இதில் பார்வை(4)-இல் காணும் கடிதத்தின் படி மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கீழ்காணும் படி பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது.

| வ. எண். | மாணவர்கள் பெயர்/பள்ளியின் பெயர் | நிலை | விழா நடைபெறும் நாள்/இடம் |
|---|---|---|---|
| 1. | எஸ்.காவியா, 9ஆம் வகுப்பு, திருவள்ளுவர் மேல் நிலைப் பள்ளி, குடியாத்தம். (ஆங்கில வழி) | முதல் | 28.02.2025-ஆம் தேதி காலை 10:30 மணி Meeting Hall No.2, 6th floor, Urban Administrative Building, 75 MRC Nagar, Raja Annamalaipuram, Chennai-28., |
| 2. | T.யோகபிரியா, 11ஆம் வகுப்பு, அரசு மேல் நிலைப் பள்ளி, பென்னாத்தூர். (தமிழ் வழி) | இரண்டு | |

Scanned with OKEN Scanner

எனவே, பரிசு பெறவிருக்கும் மேற்காண் மாணவர்களை பொறுப்பாசிரியருடன் பாதுகாப்பாக அழைத்துச் சென்று விழாவில் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பு: கூடுதல் தகவலுக்கு கீழ்காணும் ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

ஒருங்கிணைப்பாளர்–திருமதி.K.யசோதா

தொடர்பு எண்: 94446 27020/ 044–2495 1725.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

25/2/25

பெறுநர்

தலைமையாசிரியர்

1. திருவள்ளுவர் மேல் நிலைப் பள்ளி, குடியாத்தம்.
2. அரசு மேல் நிலைப் பள்ளி, பென்னாத்தூர்.

நகல்

1. சென்னை–06, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்
   (இடைநிலை/தனியார் பள்ளிகள்)
   வேலூர்.
3. அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்
   வேலூர்.(தகவலுக்காக)

Scanned with OKEN Scanner